சைவ மாநாட்டில் 'சாஸ்திர' நிந்தனை!

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.   MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1]   சென்னை (12—1—50)   வெளியூர் (13—1—50)   [இதழ் 141

இலங்கையில் தமிழ்ப் புலவோரின் தன்மானப் பேச்சு!

—(0)—

"சமயத்தின் பெயரால் அக்கிரம—அட்டூழியங்களா"?

'சிலப்பதிகாரக் கண்ணகி யெங்கே, மாபாரதப் பாஞ்சாலி யெங்கே?

"சமயம் என்றதும் மக்கள் இன்று சிரிக்கவும் செய்கிறார்கள். அப்படி அவர்கள் சிரிப்பதற்கு சமயத்தின் பெயரால் செய்யப்பட்டு வந்த, செய்யப்பட்டு வருகிற அக்கிரமங்களும் அட்டூழியங்களுமே காரணங்களாகும்"

—தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

"தாடி வளர்த்து, வேஷம் பூண்டு, காஷாயமும் கமண்டலமும் தரித்து, காயத்திரி ஜபித்து, காட்டிற்கு ஓடி, மூச்சை பிடிக்கும் தெய்வ வணக்கத்தைத் தமிழன் ஒருபோதும் விரும்பியதேயில்லை. தோற்றங்களனைத்துக்கும் தோற்றமாக விளங்கும் பெண்மையைப் பேய்த்தன்மை என்று ஒருபோதும் அவன் பிதற்றியதில்லை. மாயை என்று கருதாத இந்த மதிப்பரிய உலகிலே, இல்லற தர்மத்தை மேற்கொண்டு, காதல் மொழியும் கூட்டு வாழ்க்கை நடத்தி, மக்கட் பேறைப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து விளங்க விழைந்தான் தமிழன். இமயத்தின் முடியில் ஏறிக் கொண்டது போன்ற பெருமை படைத்து வாழ்ந்த தமிழன், இன்று அதல பாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறான். அவன் உயர்வு, கீர்த்தி, தன்மையாவும் தாழ்ந்துப் பட்டுவிட்டன.

ஒரு தலைவி ஒரு தலைவனை அடைந்து வாழும் உன்னத வாழ்க்கையையே தமிழர் மேற்கொண்டனர். பின்னைப் பேற்றைத் தமிழர் மதிப்பரியதொன்றாக மதித்தபோதிலும், அதைவிட அதிகமாகவே கற்புக்கு மதிப்புக் கொடுத்தனர். ஆரியரைப்போல் மக்கட் பேற்றுக்காக கற்பை யிழந்து, பல கணவரைத் தழுவ தமிழ் மகளிர் ஒருபோதும் தலைப்பட்டதில்லை. தென் தமிழ்நாட்டு இலக்கியங்களுள் தலைசிறந்து மிளிரும் 'சிலப்பதிகாரம்' சித்தரிக்கும் கற்பரசி கண்ணகியையும், ஆரியர் கதையான பாரதம் கூறுகின்ற குந்தி, ஐவருக்கு ஆட்பட்டு அருமவரையும் இச்சிக்கும் திரௌபதை ஆகியோரையும் ஒப்பிட்டுப் பார்க்கும்படி வேண்டுகிறேன்".

இரு பெரும் புலவர்கள் இலங்கையில் ஆற்றிய சொற்பொழிவுகளின் சத்துள்ள பகுதிகளை மேலே எடுத்துக் காட்டியுள்ளோம். எந்த இடத்திலே வெளியிட்டனர் இக்கருத்துக்களை யென்று யாருக்குமே கேட்கத் தோன்றும். இக்கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்ட இடம் சைவ சமய நாடாகும். கொழும்பில் கூடிய சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆண்டு விழாக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய தோழர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும், மேற்படி சமாஜ சைவ இளைஞர் மாநாட்டில் சொற்பொழிவாற்றிய வித்துவான் தோழர் க. வேந்தனாரும் முறையே வெளியிட்டக்கருத்துக்களே இவை.

காலமும் கருத்தும் மதவாதிகள் உள்ளத்தில் எவ்வளவு வேகமாக வேலை செய்து வருகிறதென்பதற்கும், மதமாநாட்டாரும் கூட்டத்தாரும் எந்த அளவு வரை காலத்துக்கேற்ற கருத்துக்களை 'ஜீரணம்' செய்து கொள்ளவேண்டிய கட்டாயத்துக்கு வந்துவிட்டனரென்பதற்கும் இது நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

காலம் தெரிந்துவரும் கருத்துச் சுழலில், பழமையும் பெரட்டமும் வந்து சிக்குவதில் சீர்கெட்டுத் தீர்ந்து போமென்பதை இந்நாள்வரை உணராதார் இவவுலகுக்கு ஏலாதாரே!

சைவ சமய மேடையினில் கூடிய புலவர்கள் சமய மயக்கத்துக்கு முற்றிலும் ஆட்பட்டு விடாது, இடையிடையே வெளியுலகு நினைவும் மனதிற் கொண்டவராய், செம்மைக் கருத்துக்கள் சில பலவற்றை வெளியிட்டிருப்பது கண்டு மகிழ்கிறோம். சீர்திருத்த சிந்தனை உணர்வு காட்டுத் தீப்போல் பரவிவரும் இந்நாளில், மேலும் மேலும் பிற்போக்கு இருட்டுக் குகைகளில் செல்லாமல் ஓரளவு துணிவுடன் உண்மைக் கருத்துக்கள் ஒலிக்கச் செய்த முன்வந்தமைக்குப் பாராட்டுகிறோம்.

நாம் தமிழர் — திராவிடர் என்ற நினைவுடன், சுயமரியாதை—பகுத்தறிவு என்பவற்றைக் கொண்டு, அனைத்துப் பிரச்னைகளையும் ஆழ்ந்து ஆராய முற்பட்டால், எல்லா இடருந் தீர்ந்தொழியும்; இன்பத்தை நாமே இட்டுக் கொள்ள முடியுமெனக் கூறி இதனை முடிக்கிறோம்.

க்ஷயநோய்க்குப் பலி

சென்னை எழும்பூர் பகுதியில் க்ஷய நோயினால் மரணமடைவோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. [illegible] கணக்குகளின்படி [illegible] சென்னை நகரில் [illegible] 1947-ம் ஆண்டில் சென்னையில் க்ஷயரோகத்தினால் மாண்டவர் எண்ணிக்கை 5 2; 1948-ம் ஆண்டில் மாண்டவர்கள் 621.

பொருளாதாரத் துறையில் ஜப்பானை ஆட்டிப்படைக்கிறது அமெரிக்கா!

செல்வாக்கைத் தகர்க்க கம்யூனிஸ்டு நடவடிக்கைதேவை

'காமின்பார்ம்' பத்திரிகையின் அறிவுறுத்தல்!

லண்டன், ஜன. 11—

ஜப்பானில் அமெரிக்க செல்வாக்கைக் குறைக்க ஜப்பானிலுள்ள கம்யூனிஸ்டு தலைவர்கள் பலமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று "காமின்பார்ம்" பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

ஜப்பானிய கம்யூனிஸ்டு தலைவரான நொஸாகா இதற்கான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை என்று, அப்பத்திரிகை குற்றம் சாட்டியிருக்கிறது.

நொஸாகா அமெரிக்கர்களுடன் தகராறு வேண்டாம் என்று ஒதுங்கியிருக்கிறார் என்று குறைகூறி 'பிராவ்தா' பத்திரிகையும் குறைகூறியிருக்கிறது. ஜப்பானின் பொருளாதாரத்தைப் பெரும்பாலும் யுனைடெட் ஸ்டேட்ஸ் தன் கைக்குள்ளேயே வைத்துக்கொண்டு ஆட்டி வைப்பதாக இப்பத்திரிகை எழுதுகிறது.

மாஸ்கோ ஜப்பானில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென விரும்புகிறது. ஆனால் ஜப்பானிலுள்ள கம்யூனிஸ்டு கட்சியினர் உடனடியாகப் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடுவது கட்சிக்கே கெடுதி விளைவிக்கும் என்று கருதுகின்றனர்.

பாலஸ்தீன உடன்படிக்கை

கெய்ரோ, ஜன 11—

சில எகிப்திய பத்திரிகைகள் பாலஸ்தீன உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கின்றன. எகிப்திய அயல்நாட்டு மந்திரி காரியாலயம் மறுத்திருக்கிறது.

பாலஸ்தீனை முழுப்பிரச்னை [illegible] பிப்ரவரி 24-ல் இஸ்ரேலுடன் செய்துகொண்ட உடன்படிக்கை [illegible] இருக்கிறது என்று அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

சன்யாட்சன் சிறைவைக்கப்பட்டிருந்த அறை

லண்டனில் சிறப்பிக்கப்பட்டு வருகிறது

லண்டன், ஜன 10—

லண்டனில் போர்ட்லண்ட் பிளேஸிலுள்ள சீன ஸ்தானிகாலயத்திலுள்ள ஒரு அறை சன்யாட்சனின் அறையாக கௌரவிக்கப்பட்டுவந்ததென்றும், சீன கம்யூனிஸ்டுகளும் இனி அம்மாதிரியே பாவிக்க வேண்டுமென்றும் இதுவரை சீன ஸ்தானிகராக இருந்து, பிரிட்டன் செஞ்சீனவை அங்கீகரித்ததால் பதவியிலிருந்து விலகிய டாக்டர் செங் டின்ஷி என்பவர் கோரியிருக்கிறார்.

1898 அக்டோபரில் சன்யாட்சன் இந்த அறையில் சீன சக்ரவர்த்தியின் தூதரால் அடைக்கப்பட்டிருந்தாராம்.

சன்யாட்சன் இந்த 'சிறை'யில் அடைப்பட்டிருந்தபோது பிரிட்டிஷ் அயல்நாட்டிலாகாவிலுள்ள தன் நண்பர் ஒருவருக்கு ஒரு கடிதம் எழுதி அதை ஜன்னல் வழியாக வீசியெறிந்தாராம். இதைக்கண்ட ஒரு பால்காரர் அதை எடுத்து தபாலில் சேர்த்திருக்கிறார் உடனே பிரிட்டிஷ் அதிகாரிகள் சன்யாட்சனை அடைத்து வைத்திருப்பது சர்வதேச சட்டத்திற்கு விரோதமானதென்று ஆட்சேபித்தனர். இதன் பலனாக சன்யாட்சன் விடுவிக்கப்பட்டார்.

அன்றுமுதல் அந்த அறை சன்யாட்சனின் அறையாக கருதப்பட்டு வருகிறது.

சியாங்கும்பலுக்கு அமெரிக்கா அபயம்!

பார்மோசாவுக்கு டாங்கிகள் ஏற்றுமதி

நியூயார்க், ஜன. 11—

பார்மோசாவிலுள்ள சீன தேசிய சர்க்காருக்காக டாங்கிகளும், கவச மோட்டார்களும் பிலடெல்பியாவில் துருக்கிக்குச் சொந்தமான கப்பல் ஒன்றில் ஏற்றப்பட்டிருக்கிறது. கப்பலின் ஏஜெண்டுகள் கப்பல் அடுத்த வாரம் புறப்படுகிறது என்பதைத் தவிர எதுவும் கூற மறுக்கின்றனர்.

சியாங் சமீபத்தில் ஆயுதத் தளவாடங்கள் எதுவும் வாங்கியதாகத் தெரியவில்லை என்று யு. எஸ். பாதுகாப்பு இலாகா கூறுகிறது. ஆனால் சியாங்கிற்காக ஒதுக்கப்பட்ட 12½ கோடி டாலர்களுக்கான தளவாடங்கள் இன்னும் பூராவாக அனுப்பப்படவில்லை என்று மட்டும் கூறுகிறது.

யார் இதை வாங்குகிறார்கள் என்கிற பெயரை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. யு. எஸ். அதிகாரி ஒருவர் கூறுகையில், சீனத் தேசீய சர்க்காரை அமெரிக்கா இன்னும் அங்கீகரித்து வருவதாகவும், அந்த சாக்குகள் அங்கு அனுப்பப்படுவதற்குத் தடை எதுவும் இல்லை என்றும் கூறினார். இதனால் சர்வதேச நிலைவு எப்படியிருக்கும் என்பது பற்றி சர்க்கார் வட்டாரங்கள் மௌனம் சாதிக்கின்றன.

பர்மாவுக்கு காமன்வெல்த் கடன் உதவி

பர்மாவுக்குக் கடன் உதவிய [illegible] காமன்வெல்த் நாட்டின் ஆலோசிக்கப்பட்டு வருகிறதென்றும், 50 லட்சம் ஸ்டர்லிங் அளிக்கப்பட [illegible] இருந்து வருவதாக [illegible] ஸ்டாண்டர்ட் பத்திரிகை கூறுகிறது.

[illegible] 10 லட்சம் கொடுக்கும் என்றும், இந்தியா பாகிஸ்தான் இலங்கை [illegible] கொடுத்து உதவும் என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

மாலை மணி

சென்னை 12—1—50 வியாழக்கிழமை

விஞ்ஞானத் தொழிற்பயிற்சி

"நமது கைத்தொழில்களை வளர்ச்சியுறச் செய்வதற்கு விஞ்ஞான அறிவும், தொழில் நுட்ப அறிவும், இன்றியமையாதவை என்பது நமக்கெல்லாம் தெரிந்ததே. சென்ற காலத்தில் நாம் இத்துறையில் முன்னேற்ற மடையாததற்குக் காரணம், விஞ்ஞான சம்பந்தத்தில் பயிற்சி பெற்ற மனிதர்கள் போதியமட்டும் இல்லாததுதான்"

என்று, தோழியர் ராஜகுமாரி அமிர்த கௌரி, கிண்டி அழகப்பா தொழில் கலலூரியைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

குடிசைத் தொழில்களின் பெருமைகளையே பலகாலமாகப் பேசிவந்ததோடு மட்டுமல்லாமல், விஞ்ஞான வழியில் நடைபெறும் இயந்திரத் தொழிலை வெறுத்தும் வந்த காங்கிரஸ்காரர்கள் விஞ்ஞான வளர்ச்சியைப்பற்றியும், இயந்திரத்தொழில் பெருக்கத்தைப் பற்றியும் இப்பொழுது பேசி வரத் தலைப்பட்டிருப்பது, விசித்திரமான காட்சி என்ற போதிலும், வரவேற்கத்தக்கதாகும்.

ஒருநாடு வளம் பெற்று உயர விஞ்ஞான அறிவும், தொழில்நுட்ப அறிவும் பெருக வேண்டுமென்று அரசியலறிவு படைத்த பகுத்தறிவியக்கத்தினர் கூறி வந்த காலத்திலெல்லாம், காங்கிரஸ்காரர்கள் குறிப்பாகக் காங்கிரஸ் வைதிகர்கள், விஞ்ஞானத்தை இழித்துப் பழித்துப் பேசியும், இயந்திரத்தைப் பிசாசு என்று கூறியும் வந்தனர். மக்களை விஞ்ஞான வழியினின்றும் திருப்பி, சுயதேவை பூர்த்தி செய்துகொள்ளுவதற்கேற்ற குடிசைத் தொழில்களையே கைக்கொள்ளும்படி வற்புறுத்தவும் செய்தனர். அதன் விளைவாக மக்களுக்கு விஞ்ஞானத்திடத்து பயனற்ற வெறுப்பும், குடிசைத் தொழில் போன்ற புராதன பழக்கத்திடத்தே தேவையற்ற ஆவலும் ஏற்பட்டன. விஞ்ஞான வளர்ச்சியில் நாட்டங்கொள்ளாத காரணத்தால் விஞ்ஞானமும், அதன் வழிப்பட்ட தொழில் வளர்ச்சியும் இத் துணைக் கண்டத்தில் சிறப்புறுமற் போயின. குடிசைத் தொழில் மீது கொண்ட ஆவல் 'பக்தி' வடிவிலேயே இருந்த காரணத்தால், அது கவலைக்குதவும் தொழிலாகக் காணப்படவில்லை. பயன் தரக்கூடிய விஞ்ஞானம் புறக்கணிக்கப்பட்டது; பக்தி காட்டப்பட்ட குடிசைத் தொழில் திட்டங்கள் பயன் தரவில்லை! இரண்டு முறைகளாலும் நாட்டிற்கு நலமெய் ஏற்படவில்லை. காங்கிரஸ்காரர்கள் ஆளவந்தார்களாக ஆனபிறகுதான், விஞ்ஞானத்தின் அருமையை உணரத் தலைப்பட்டு, தெளிவு பெற்றுள்ளனர். குடிசைத் தொழில்களையே வளர்த்து, ஒவ்வொருவரும் சுயதேவைகளைத் தாங்களே நிறைவேற்றிக்கொள்ளவேண்டும் என்ற உருப்படாத் திட்டத்தைப் பற்றிய போதனை ஒருபுறம் நடத்திக்கொண்டிருந்தாலும், விஞ்ஞான முறையில் தொழில் பெருக்கம் ஏற்படவேண்டும் என்ற உணர்வு பெற்றிருப்பது பாராட்டுவதற்குரியதுதான்.

கைத்தொழில்கள் அபிவிருத்தியடையாமலிருப்பதற்குக் காரணம், விஞ்ஞான சாஸ்திரத்தில் பயிற்சி பெற்ற மனிதர்கள் போதிய மட்டும் இல்லாததுதான் என்று தோழியர் அமிர்த கௌரி கூறுகிறார். அந்தக் குறைபாடு ஏற்படுவதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்களே என்று கூறினால் அது தவறுடையதாகாது. விஞ்ஞானத் தொழில் வளர்ச்சியை அலட்சியப்படுத்தும் போதனையை அவர்கள் பலகாலமாகச் செய்துவந்ததே, குறைபாட்டிற்கு முக்கிய காரணமாகும். அந்த அலட்சிய மனப்போக்கை மாற்றிக்கொண்ட அளவில் நமக்கு மகிழ்ச்சிதான்.

விஞ்ஞானத் தொழில் வளர்ச்சி கருதி அழகப்பா தொழில் நுட்பக் கலலூரி நிறுவப்பட்டிருப்பது கண்டு மகிழ்கிறோம். அது நிறுவப்படுவதற்கு முக்கிய காரணமாக இருக்கும் தோழர் அழகப்பா அவர்களையும் பாராட்டுகிறோம்.

அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரியில், ரஸாயன எஞ்ஜினியரிங், நெசவுத் தொழில், தோல் தொழில் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. திராவிடம் சிறந்து வளம் பெற்று வாழ, இத்தகைய கல்லூரிகள், வேறு பல தொழில்களிலும் பயிற்சி பெறுவதற்கு ஏராளமான அளவில் திராவிடத்தில் ஏற்படவேண்டும். ஏற்பட வாய்ப்பும் இருக்கின்றது. வசதிகளும் இருக்கின்றன. ஏற்படுத்த உறுதியான, உண்மையான மனப்பாங்கு ஆளவந்தார்களிடத்தில் அரும்ப வேண்டும்.

தனிப்பட்ட செல்வர்கள் தங்கள் காலத்திற்குப் பின்னால் யாரோ, எந்த சோமபேறியோ, எப்படியோ செலவழித்து; எவ்வாறெல்லாமோ பாழ்படுத்தப் போகும் செல்வம் தங்கள் செல்வம் என்பதை உணர்ந்ததை இம்மாதிரி பொதுப்பயன் தரும் கலலூரிகளை நிறுவ முன்வருவார்களேயானால், நாட்டுமக்கள் பயன் பெறுவர், நாடும் முன்னேறும். சொத்துக்கள் அரசாங்க மயமாகி, அரசாங்கம் நாட்டிற்கேற்ற நற்பணிகளைச் செய்ய முற்படும் காலவரையில், அழகப்பாவைப்போன்ற பலரும் நடந்துகொள்வார்களேயானால், இடைக்காலம்சிறப்புற்று விளங்க சிறிதாவது வழி ஏற்படும். விஞ்ஞான வழியில் பயிற்சி கொடுக்கும் கல்லூரிகள் திராவிடத்தின் திக்கெட்டும் தோன்றினால் இயற்கை வளங்களை, மக்களுக்கு இன்பந்தரும் வளங்களாக மாற்ற வசதி ஏற்படும். பாழ்பட்ட வைதிக காரியங்களுக்குப் பணத்தைக் கொட்டி அழும் மக்கள் இதைச்செய்ய முன்வருவார்களேயானால், நாடு எவ்வளவோ முன்னேற வழி ஏற்பட்டிருக்கும்.

"ரஷ்யாவில் விஞ்ஞான ஆராய்ச்சித்திட்டம் நாட்டுத் தேவைகளுக்கேற்றபடி வகுக்கப்படுகிறது. பல ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் விஞ்ஞான வேலையில் தீவிரமாக முற்படுவதுடன் அதைப்பரப்பவும் முயற்சிக்கின்றனர்" என்று பிரபல ரஷ்ய விஞ்ஞானி டாக்டர் எஞ்ஜல ஹார்ட் இந்திய விஞ்ஞானக் காங்கிரஸில் கூறியுள்ளார். அதுபோல திராவிடத்தின் தேவையான திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள திராவிடத்தில் விஞ்ஞான ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் ஏற்படவேண்டும்; விஞ்ஞானத் தொழிற் பயிற்சி வளர்க்கப்படவேண்டும்; இவற்றைச்செய்ய திராவிடரனைவரும், திராவிடத்தில் நிலவும் அரசாங்கமும் முன்வரவேண்டும்! முன்வருமபடி செய்யவேண்டும்! அன்னவுனபத் திராவிடமாகத்தானிருக்கும்.

அறிவுக் கதிர்!

கல்வித் துறையிலோ, சமூகத் துறையிலோ, பொருளாதாரத் துறையிலோ பிற்போக்குற்றுள்ள சமூகங்கள் பால விசேஷ கவனம் செலுத்தி முன்னேற்றத்துக்கு முழு சந்தாப்பம் அளிக்க வேண்டியது, அரசாங்கத்தின் கடமை யென்றே நான் கருதுகிறேன்.

பண்டிதநேரு
(1937-ல கூறியது)

ஆஸ்ட்ரேலியக் கடலில் மீன் பிடிக்க

அமெரிக்கா அனுமதியைக் கோருகிறது ஜப்பான

டோக்கியோ, ஜன. 11— சில கட்டுப்பாட்டுக்குட்பட்டு தெற்கிலுள்ள கடலிலும் ஆஸ்திரேலிய கடல் பகுதியிலும் மீன் பிடிக்க தன் படகுகளை அனுப்புவதற்கு ஜப்பான் முஸ்திப்பு செய்து வருகிறது.

சமாதான உடன்படிக்கை ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் இதற்கு அமெரிக்காவின் அனுமதி போதும் என்றும் அந்த அனுமதியை ஜப்பான் எதிர்பார்ப்பதாகவும் தெரிகிறது.

இப்பொழுது சில கட்டுப்பாட்டுக்கு 24 டிகிரி இப்பாலேயே மீன் பிடிக்க மக்ஆர்தர் அனுமதித்திருக்கிறார். இப்பிரதேசத்தை இன்னும் விஸ்தரிக்க வேண்டுமென்று ஜப்பான் இப்பொழுது கோருகிறது.

சென்னை மாவட்ட
திராவிட முன்னேற்றக் கழக
மாநாடு
21, 22-1-50 சனி, ஞாயிறுகளில்
★
சென்னை மிருகக் காட்சிசாலைக்குப் பின்புறத்தில் அமைந்துள்ள
அழகிரி பந்தலில் நடைபெறும்
★
இரண்டு நாட்களிலும் இரவு நாடகங்கள் உண்டு
சி. வி. ராஜன்.
விளம்பர அதிகாரி.

பத்ரிநாத் கோயிலுக்கும் பேராபத்து!

ஐக்கிய மாகாண சர்க்கார் அக்கரை!

பெரும் மத ஸ்தலமென்றும் தீர்த்தயாத்திரைக்குரிய இடமென்றும் கருதப்படும் பத்ரிநாத்துக்குப் பேராபத்தைக் கிட்டியதை யனுசரித்து, ஐக்கிய மாகாண சர்க்கார் பெருஞ் செலவில் அவ்வாபத்தைத் தடுக்க முனைந்துள்ளனராம். பத்ரிநாத்துக்குப் பக்கத்தில் ஓடும் அலகாநந்த ஆறு, மேற்படி ஸ்தலத்தை சிறகச் சிறுக அரித்து வருகிறதாம். இது கடந்த சில ஆண்டுகளாகவே நடைபெற்று வருகிறதாம். மேலும் இப்படி விட்டு வைக்க மனமில்லாத மாகாண சர்க்கார், ரூ. 81,000 செலவில் அலகாநந்த ஆற்றின் வலது கரையில் தீவிர பாதுகாப்புக் கட்டிடங்கள் எழுப்பத் திட்டமிட்டுள்ளனராம். இப்போது காப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளாத பட்சத்தில், பத்ரிநாத் ஆலயத்துக்கே ஆட்டங் கொடுத்துவிடுமென எஞ்சினியர்கள் கருதுகிறார்களாம்.

சென்னை மாவட்ட
தி. மு. க. மாநாடு
21, 22—1—50ல் நடைபெறும் மாநாட்டுப் பந்தலில் ஸ்டால்கள் எடுத்துக்கொள்ள விருப்பமுள்ளவர்கள் 18—1—50-க்குள் செயலாளர் 2/45 முத்துமாரிச் செட்டித் தெரு, பண்ணடி, சென்னை. என்ற விலாசத்திற்கு எழுத்து மூலமாகவோ, நேரிலோ வந்து ஏற்பாடு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.
சி. வி. ராசன்
விளம்பர அதிகாரி.

செ. மா. தி.மு.க. மாநாடு தொண்டர் படையினர்க்கு!

சென்னை மாநாட்டுத் தொண்டர் படையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவரும் 16-1-50 திங்களன்று மாலை 5-30 மணிக்கு மாநாடு நடைபெறும் மைதானத்தில் வந்து கூடுமாறு அழைக்கப்படுகிறார்கள். தொண்டர் படையில் இனி யாரும் சேர்க்கப்படமாட்டார்கள்.

ஏ. ஆர். சேஷாசலம்,
படைத் தலைவர்.

கும்பகர்ணன்,
துணை படைத் தலைவர்.

ஜனநாயக உலகின் நடுநாயகம்!

லண்டன், ஜன 11— இந்து மகா சமுத்திர பிரதேசங்களே ஜனநாயக உலகின் கேந்திரமாக விளங்குகிறது என்று இந்தியா பாகிஸ்தான இலங்கையில் கருதப்படுகிறதென்பதைக் குறிப்பிட்டு லண்டன் டைம்ஸ் பத்திரிகை நிருபர் எழுதுவதாவது:-

பிரிட்டனுக்கு ஏற்கனவே அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. பிரதேச ஒற்றுமையை அப்பிரதேசத்திலுள்ள காமென்வெல்த் இடையே ஏற்படுத்த யுனைடெட் ஸ்டேட்ஸ் சிரத்தை கொள்ளவில்லை. அதிருஷ்டவசமாக யு. எஸ். தன் கொள்கையை இவ்விஷயமாக மாற்றிக்கொள்ளவிருக்கிறது.

இந்தோசீனாவும் கம்யூனிஸ்ட் வசமாய் விட்டால் சீனாவிலுள்ள சர்க்கார் கம்யூனிஸ்டுகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டுவிடும். பின்னர் மலேயாவிலும் பர்மாவிலும் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் பரவ அதிககாலமாகிவிடாது. இவைகளை மனதில் கொண்டு பாதுகாப்பு ஏற்படுவதை முன்னதாகச் செய்யவேண்டும்

வளமான திராவிடம் விட்டு, கடல் கடந்துழல்வதேன் திராவிடன்?

—(0)—

மக்கள் பெயரால் நடக்கும் ஆட்சியில் மக்கள் உரிமைக்கு 'சமாதி'!

—(0)—

தேவையில்லா இந்தி மொழியை வேண்டாதார் மேல் திணிப்பதா?

—(0)—

பொள்ளாச்சியில் தோழர்கள் முழக்கம்

பொள்ளாச்சி, டிச. 28— பொள்ளாச்சி, திராவிட முன்னேற்ற வாலிபர் கழகத்தினரால் 25-12-49 அன்று தேர் நிலத்திடலில், ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது தோழர் கே. ஆர். செல்லமுத்து இயக்கப் பாடல்களும் நாட்டுப்பண்ணும் வெகு அழகாகப் பாடி முடித்தார். பின்னர், தோழர் கோ. கோபால் அவர்களைத் தலைமையாகக் கொண்டு கூட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

தலைவர் முன்னுரையாக பல அரிய கருத்துக்களை எடுத்துக் கூறிவிட்டு, தனக்குப் பின்னால், தோழர் ஏ. வி. எம். சாமி அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார், அதற்கிணங்க, தோழர் ஏ. வி. எம். சாமி அவர்கள், கழகக் கொள்கைகளைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லி முடித்தார். அடுத்தாற்போல், தோழர் மு. கருணாநிதி அவர்களுடன் கோவையிலிருந்து வந்திருந்த, தோழர் கண்ணதாசன் பேசத் துவங்கினார்.

கண்ணதாசன்

அவர் பேசியதின் சுருக்கமாவது:—

பெரியோர்களே, தோழர்களே, அலுவசியமான காரியங்களுக்கு அதிகப் பணத்தை செலவு செய்யும், செட்டிநாட்டு வம்சத்திலே தோன்றியவனானவன். எங்கள் ஊரிலே அன்று பிறந்த குழந்தைகளுக்குக் கூட திருநீறுபூசுவார்கள் என்றால், அவர்களது பழமை மோசத்தை நீங்களே கணித்துக் கொள்ள வேண்டியதுதான். நான் முன்பு, திராவிடக் கழகத்திலே கலந்துகொள்ளாமலிருந்தவன், ஆனால் கொள்கைகளை ஆராய்வதில் ஆர்வமுள்ளவன். அந்த ஆராய்ச்சியின் விளைவு தான், இன்று நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அங்கத்தினனாகி, முதல் தடவையாக உங்கள் முன்னிலையில் பேச வந்திருக்கிறேன்.

நமது கழகம் தேர்தலில் கலந்துகொள்ளாது. தேர்தலில்கலந்துகொள்ளாது என்ற காரணத்தால், அது, தேர்தலில் கலந்துகொள்ளும் நண்பர்களுக்கு உதவி செய்யாமலும் இருக்காது. காங்கிரஸ்காரர்கள், ஆட்சிக்குச் செல்லாததற்கு முன்பு, நமக்கு ஆசை காட்டி ஓட்டு வாங்கி அதிகார பீடங்களில் அமர்ந்தார்கள். அவர்கள் சொற்படி ஏதாவதும் செய்திருக்கிறார்களாவென்றால், அது தான் இல்லையாது பொதுவாக, சட்டசபை மெம்பர்கள் யாவருமே, தங்கள் சுயநலத்தைத் தான் பெரிதாகப் பார்க்கிறார்களே தவிர, பொறுப்புடன் நடந்துகொள்வதாகத் தெரியவில்லை.

அடுத்து தோழர் மு. கருணாநிதியவர்கள் பேசத் துவங்கினார். சுமார் ஐயாயிரம் மக்கள் கூடியிருந்தனர்

மு. கருணாநிதி

அவர் பேசிய பேச்சின் சுருக்கமாவது:—

அன்பார்ந்த பெரியோர்களே, தாய்மார்களே, தோழர்களே திராவிட இயக்கமானது கடந்த இருபத்தைந்து வருடங்களாக அரசியல் சமுதாய இயல், பொருளியல் ஆகிய முத்துறைகளிலேயும் பெருந்தொண்டாற்றி வருகிறது. ஏன் இதர கட்சிகள் இல்லையா? திராவிட இயக்கம் ஆரம்பிக்கவேண்டியதன் அவசியம் என்ன? வென்று நீங்கள் கேட்கலாம். காலை முதல் மாலைவரை பாட்டாளி பாடுபடுகிறான். அவன் உழுகிறான், விதைக்கிறான், அறுக்கிறான் களஞ்சியத்திலே சேர்க்கிறான். அவனது உழைப்பினால், களஞ்சியம் களஞ்சியமாக தானியம் சேருகிறது. ஆனால் அவனுடைய வீட்டிலோ வென்றால் பசிப்பிணியும் தரித்திரமும் வாட்டி வதைக்கிறது. அதே சமயத்தில், பாடுபடாத ஒரு கூட்டம், உழைக்காமல் ஊரை ஏமாற்றி, பாட்டாளி வயிற்றில் மண்ணைப் போட்டு, உழைப்பின் பயனை அனுபவிக்கிறது. இந்த நிலை ஏன்? என்று நாங்கள் ஆராய்ந்தோம் கட்டத்துணியில்லை, வாழ்வதற்குத் தகுந்த வசதியான வீடில்லை குச்சுக் குடிசைகள் ஒருபுறம். மற்றொருபுறம் மாட மாளிகை வாசிகள், உல்லாசமான வாழ்க்கை நடத்துகிறார்கள் இந்த நிலையை மாற்ற முடியாதாவென்று ஆராய்ந்து பார்த்தோம். உலகத்திலுள்ள எல்லா மதஸ்தர்களை விட கிறிஸ்துவ மதத்தினர் தான் அதிகம். அவர்களுக்கு பரமபிதா என்ற ஒரே கடவுள் தான். முஸ்லீம்களுக்கு ஒரு அல்லாவாகிய அல்லா. பௌத்தர்களுக்கு ஒரே கடவுள் புத்தர். சமணர்களுக்கு ஒரே கடவுள் அருகன் ஆனால் இந்துக்களுக்கு மாத்திரம் முப்பத்திமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிர ரிஷிகள் இதுவலலாமல் பிள்ளையார், இடும்பன், அடைக்கலப் பாலர்கள் காளி, மாரி, மாடசாமி, கருப்பண்ணன் முதலிய தெய்வங்கள் இதுவும் போதாமல், வேப்பமரம், அரசமரம் முதலியவைகளிலும் தெய்வம் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர்! வெட்கமில்லையா. நாகரிகமடைந்த மேனாட்டவர் இந்த நிலையைக்காணும் போது என்ன நினைப்பார்கள்? ஆகவே, இந்த மதத்தினால் வயிறு பிழைக்கும் அர்ச்சகர் பூசாரிகளையும், மடாதிபதிகளையும், கடவுள் தரகர்களையும் கொண்டுள்ள திராவிடத்தில்பகுத்தறிவைப்பரப்பி, மதமூட நம்பிக்கைகளை ஒழிக்காக வேண்டுமென்று தீர்மானித்தோம்.

சுரண்டலைத்தான் கண்டிக்கிறோம்!

வளமான திராவிடத்தை விட்டு, மக்கள் மலேயாவுக்கும், சிங்கப்பூருக்கும், தென்னாப்பிரிக்காவுக்கும் செல்வானேன்? ஏன் நம் நாட்டில் வாழ அவர்களுக்கு உரிமையில்லாது போய்விட்டது? பண்டுதொட்டு நாட்டை ஆண்டு வந்த வீரத்தமிழன் இன்று தன் மானமிழந்து அயலாருக்கு நாட்டை விட்டுவிட்டு, அடிமையாக வாழக் காரணமேன்? என்று ஆராய்ந்தோம். இந்த ஆராய்ச்சிகளின் முடிவுதான், திராவிடர் கட்சியென்பதை உணருங்கள்.

இரண்டாவதாக, காங்கிரஸ் தோழர்கள், எங்களைப் பார்ப்பனத் துவேஷிகள் என்று கூறிவருகின்றனர். திராவிட கட்சி, ஒரு வகுப்புவாத இயக்கமென்று வெகு சுலபத்தில் கூறிவிடுகின்றனர். இது எங்ஙனம் பொருந்துமென்று சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இதுவரை, நாங்கள் தனிப்பட்டமுறையில், எந்தப்பார்ப்பனரையாவது தாக்கியிருக்கிறோமா? கிடையாதே! பார்ப்பனீயம் என்ற பாதகமான முறை ஒழிக்கப்பட வேண்டுமென்றுதானே கூறிவருகிறோம். அது தேவையற்றது, தீமை பயக்கக்கூடியது என்று கூறிவருகிறோம். நாங்கள் கூறுவது தவறு என்று எங்களுக்கு எதிராக பிரசாரம் செய்யட்டுமே! பிறப்பிலே உயர்வு தாழ்வு கற்பிக்கின்ற ஆரியம், பிராமணீயம் கூடாதென்று நங்கள் கூறுகிறோம். உழைக்காமல் இருந்துகொண்டு, உழைக்கும் வர்கத்தைச் சுரண்டிவாழ்வது கூடாது என்று கூறுகிறோம்.

வரிப் பணம் கரியாகிறது!

ஜாதிச்சின்னங்களை அணிந்து கொண்டு, ஜாதித் திமிர் காட்டாதே என்று நாங்கள் கூறுகிறோம். எந்தப் பார்ப்பனரையும் நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் தன் ஜாதிக் கர்வத்தை காட்டும்படியான காரியங்களை விட்டுவிட்டு, நமது கொள்கையை ஒப்புக்கொண்டு, நம்மோடு நாட்டுக்குத் தொண்டு செய்ய வரட்டும் நாங்கள் வேண்டாமென்று கூறவில்லை. பழமையும் பசியும் கூடாது என்பதுதான். இன்று நடக்கும் ஆட்சிமுறையானது பழமையின்பேரால் கட்டப்பட்டிருக்கிறது. நடுராத்திரியில், நல்ல நேரம் பார்த்துத்தான், இந்நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கப்பட்டது! இன்று நடக்கும் ஆட்சி மக்களின் பேரால் நடத்தப்படுகிறது. ஆனால் மக்களுக்குத் தேவைப்பட்டதைச் செய்வதற்கு ஆட்சியாளருக்கு மனம் வருவதில்லை. எதற்கெடுத்தாலும் பணமில்லை என்கின்ற பதில்தான் வருகிறதே தவிர, வசூல் செய்யும் பணமெல்லாம் எங்கு சென்று மறைகிறதென்பதைச் சொல்லுவதில்லை. ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்கள், தங்கள் சம்பளத்தைத்தான் உயர்த்திக்கொண்டேபோகின்றனரே தவிர, மக்களுக்குத் தேவையான காரியம் செய்வதில்லை. அந்நிய நாடுகளுக்கு நமது நாட்டுப் பிரதிநிதிகளாகச் சென்றிருப்பவர்களுக்கு லட்சக் கணக்கில், நமது வரிப் பணம் வாரி யிறைக்கப்படுகிறது கேட்பதற்கு ஆள் கிடையாதா? அமெரிக்காவிலிருக்கும் இந்தியப்பிரதிநிதி விஜயலட்சுமிபண்டிட், தனது மாளிகையை அலங்கரிக்கப் பத்து லட்சம் டாலர் இந்திய சர்க்காரைக் கடன் கேட்டிருக்கிறார் என்றால், இதனை என்னென்று கூறுவது. இந்திய சமஸ்தானதிபதிகளையெல்லாம் பட்டேல் துரை மண்டியிடச்செய்துவிட்டார் என்று. காங்கிரஸ் தோழர்கள் வெகு பெருமையாகப் பேசித்திரிகின்றனர். ஆனால் அவர்களுக்குத் தரும் நஷ்டஈடு எவ்வளவு என்று சிந்தாவது சிந்தித்தார்களா? ஹைதராபாத் நைஜாமுக்கு மாத்திரம் நாள் ஒன்றுக்கு இருபத்தேழு லட்சம் ரூபாய் நஷ்டஈடாகத் தருகிறார் நமது பட்டேல் துரை! இன்னும் இதர சமஸ்தானதிபதிகளுக்கும் தருவதைக் கணக்கெடுத்துப் பார்த்தால், கோடி கோடியாக நமது பணம் கொட்டப்படுகிறது தருமா? இதுதானா பட்டேல் துரையின் சமர்த்து!

கண்மூடித்தனமாகவா கண்டிக்கிறோம்!

ஆதித்திராவிடர்கள் கோயிலில் நுழைந்தால் மட்டும் போதாது, அவர்களே பூஜை செய்யட்டும் என்று கூறினோம். அதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவந்தாய். அதையும் ஆதரித்தோம். ஆனால் அதே சமயத்தில் ஐந்நூறு ரூபாய் கொடுத்து லைசன்ஸ் பெற்றவர்கள் மாத்திரம் மது அருந்தலாமென்ற சர்க்காரின் போக்கைக் கண்டிக்கிறோம். அறநிலையப் பாதுகாப்பு மசோதா கொண்டுவந்தாய், அதையும் ஓரளவுக்கு ஆதரித்துத்தான் வந்திருக்கிறோம். ஜமீன் ஒழிப்பு மசோதாவைக் கொண்டுவந்தாய், இனாம்களையும் சேர்த்துக்கொள் என்று ஒத்துழைத்தோம். எதிர்க்கட்சியென்ற காரணத்தால், எங்கள் மனச்சாட்சியை விற்றுவிட்டு எதற்கெடுத்தாலும் நாங்கள் முட்டுக்கட்டை போடவில்லையே! எங்களுக்கு ஏன் வீணைக் தொந்தரவு கொடுக்கவேண்டும் இந்த சர்க்கார்?

அந்தி அரசுபுரிகிறது!

இந்தி தேவையில்லாதது: இந்தி வந்தால் தமிழ் மொழி கெடும். ஒரு மொழி இன்னொரு மொழிமீது ஆதிக்கம் செலுத்துவது கூடாது: மொழியை நுழைத்து அரசியலைப் புகுத்தும் இந்த அந்தி வேண்டாம் என்று கூறினோம். மாநாடு நடத்திக் கண்டனத் தீர்மானங்களைக் தெரிவித்தோம். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை அரசியலார் முன்பு வைத்தோம். ஆனால் எங்கள் வேண்டுகோளைச் சிறிதாவது

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

பொங்கல் விழா :: :: கொண்டாடுக!

—:(0):—

பொங்கல் விழா — அறுவடை விழா — உழவர் தம் பெருவிழா — மகிழ்ச்சிவிழா!

உழவுத் தொழில் திராவிடத்தின் அச்சாணி போன்றது—எனவே பொங்கல் பெருநாள் திராவிடர் தம் திருநாள்!

பொங்கல் திருநாள்—தை முதல்நாள்—திராவிடர்க்கு ஆண்டின் முதல் நாள்!

ஆற்றிய கடமை கண்டு மகிழவும், ஆற்றவேண்டிய கடமை நெறி உணரவும் அந்நாள் நாட்டவர் அனைவர்க்கும் பயன்படும் நன்னாள்!

திராவிடத்தின் தனிப்பெரும் இயக்கமாக இருந்து பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகம், பொங்கற் பெருநாள் விழாவைக் கொண்டாட வேண்டிய தனிக் கடமையும் தனிச் சிறப்பும் கொண்டாடவேண்டிய தனிக் கடமையும். தனிச் சிறப்பும் கொண்டதாகும்.

எனவேதான், பொங்கல் விழாவைத் தக்கமுறையில் கொண்டாடும்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

கழகக் கொடியேற்றுதல் — ஊர்வலம் நடத்துதல் — பொதுக் கூட்டம் கூட்டுதல் — இன்னிசையரங்கு அமைத்தல் — நாடகம் ஆடிக் காட்டுதல் — எழுத்துப் போட்டி, பேச்சுப் போட்டி, இசைப் போட்டி, நடிப்புப் போட்டி, உடற்பயிற்சிப்போட்டி, ஓட்டப்பந்தயப் போட்டி, பந்து விளையாட்டுப் போட்டி, மாடுகள் பிடிக்கும், போட்டி ஆகிய போட்டிகள் அமைத்தும் பரிசுகள் வழங்குதல் ஏழை எளியவர்கட்கு இன்னமுது வழங்குதல், போன்றவைகளில் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்றபடி அமைத்துக்கொண்டு விழாவினைச் சீரியமுறையில் கொண்டாடுக!

உறுப்பினர் சேர்த்தல் போன்ற கடமையையும் களிப்போடு இயற்றுக!

கொடி ஏற்றுமின்! கொள்கையை விளக்குமின்!

உறுதிகொள்க! செயலாற்றுக சிறந்துவிளங்குக!

இரா. நெடுஞ்செழியன்

செயலாளர் பிரசாரக்குழு தி. மு. க. தலைமை நிலையம்

நஷ்ட ஈடு என்ற பெயரால் முதலாளித்வத்துக்குக் காணிக்கை!

பன்னிரண்டரை கோடியில் பாதி "அட்வான்ஸ்!"

——:(0):——

ஜமீன் ஒழிப்புத் திருத்த மசோதா சட்டமாயிற்று

ஜமீன்தாரி சட்டத்தால் ஒரு பகுதியினரே பலனடைவர், நஷ்டஈடானது பொதுமக்களின் பணத்திலிருந்து கொடுக்கப்படுவது நியாயமல்ல.

—பி. எஸ். மூர்த்தி

இந்த நெருக்கடியான நிலைமையில் ஜமீன்தாரி நஷ்டஈட்டுச் செலவைக் கட்டுப்படுத்துவது சரியல்ல. ஆகையால் பன்னிரண்டரைக் கோடி என்று வரையறுக்கப்பட்டிருக்கும் பகுதியை நீக்க வேண்டும்.

—ஜனாப் இப்ராகிம்

இது ஜமீன்தாரி ஒழிப்பு மசோதாவல்ல, ஜமீன்தாரி வாங்கல் மசோதாவாகவே இருக்கிறது. நஷ்டஈட்டுச் செலவு குறைந்தபட்சம் பன்னிரண்டரைக்கோடி என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், அதிகமாகவும் கொடுக்கப்படலாமென்று தோன்றுகிறது. நஷ்டஈடு கொடுக்க 6 அல்லது 8 கோடிதான் ஆகும் என்று முதலில் சர்க்கார் வாக்குறுதி அளித்தது. ஆனால் இத்தொகையை சர்க்கார் அதிகரித்துக் கொண்டே போகிறது.

—ஆர். வி. சாமிநாதன்.

சென்னை ஜமீன்தாரிகள் ஒழிப்புச் சட்டத்திருத்தமசோதா சட்டசபையில் சட்டமாக்கப்பட்ட போது உறுப்பினர் பலர், ஜமீன்தார்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி வெளியிட்டுள்ள கருத்துகள்தான் மேலே தரப்பட்டுள்ளவை.

ஜமீன் ஒழிப்பு மசோதா கொண்டுவரப்பட்டு, அது முழு உணர்ச்சியுடைய ஏறக்குறை... இரண்டாண்டுகளாகிவிட்டன. மிக அவசரமாகச் செய்து முடிக்கவேண்டிய இந்தக்காரியத்தை நமது காங்கிரஸ் ஆட்சியாளர், மிக அமைதியான முறையிலே, ஜமீன்தார்களின் மனம் புண்படாதவகையில் மிருதுவாகச் செய்துமுடிக்கின்றனர். அதுமட்டுமல்ல, இன்னும் செய்துமுடிக்கும் ஒரு பெரும் பணியால் நாட்டு மக்களுக்கு எதிர்பார்க்கப்படும் அளவுக்கு நன்மை ஏற்பட வழியுண்டாகுமெனின், அதுவுமில்லை. ஜமீன் ஒழிப்பு என்பது முதலாளித்வதத்தை முறியடித்து" தொழிலுலகை வாழவைக்கும் பணிகள் பலவற்றுக்கு முகப்படி எனலாம். ஆனால் நம்நாட்டில் அப்படிப்பட்ட ஒரு அடிப்படை பணியினால் மன... முதலாளிகளாகவே இருக்கின்றனர், என்றால் இதைவிட வேடிக்கையானதொரு ... வேறென்ன இருக்க முடியும்?

நஷ்டஈடு என்ற பெயரில் பன்னிரண்டரைக்கோடி ரூபாய் வாழாக்கப்படுகிறது. பன்னிரண்டரை கோடி என்பது அற்பசொற்பமான தொகையென்று தோழர் ஜனாப் இப்ராகிம் கூறியிருப்பதுபோல் இந்த நெருக்கடியான சமயத்தில் ஜமீன்தாரி நஷ்டஈட்டுச்செலவை கட்டுப்படுத்துவது சரியல்ல பன்னிரண்டரை கோடி என்பது பலகோடி ஏழைகளின் குருதிச்சொட்டுகளாகும்.

இந்த நஷ்டஈட்டுத் தொகையால் பலனடைவர் ஒருபகுதியினரேயன்றி பொதுமக்களல்ல. பொதுமக்களுக்கு நலன்பயக்காத எந்தச்சட்டமும் சட்டம் என்ற பெயருக்கே பொருத்தமுடையதாகாது. இவ்வகையில் பார்க்கின்றபோது, இந்த ஜமீன் ஒழிப்புச் சட்டமும் கவர்ச்சியான சட்டமேயாகும். தோழர் ஆர். வி. சாமிநாதன் அவர்கள் கூறியிருப்பதுபோல், இது ஜமீன் ஒழிப்பு மசோதா வல்ல, ஜமீன்தாரி வாங்கல் மசோதாவே யன்றி வேறில்லை.

பன்னிரண்டரைகோடி! நினைத்தாலும் நெஞ்சு வெடிக்கிறது. பார் அப்பன்வீட்டுச் சொத்து இந்தப் பன்னிரண்டரை கோடி? இது ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடாகத் தரப்படப்போகிறது. அப்படி அந்த ஜமீன்தார்கள் அடையும் நஷ்டம்தான் என்ன? ஜமீன் ஒழிந்துவிட்டால் ஜமீன்தார்கள் பிச்சைக்காரர்களாகிவிடப் போகிறார்களா? உண்ண உணவின்றி வாடப்போகிறார்களா? உடுக்க உடையும், இருக்க இடமுமின்றி தவிக்கப்போகிறார்களா? இந்நாட்டில் வறியும் பலகோடி ஏழை மக்கள் தங்கள் வாழ்நாளெல்லாம் அடையும் நஷ்டத்தைவிடவா இந்த ஜமீன்தாரர்களின் நஷ்டம் பெரிது? இதை எண்ணிப்பார்த்து என் இத்தகைய வித்தலாட்டங்கள் என்று அரசியலாரைத் தட்டிக் கேட்க ஆளில்லை பெற்ற என்னை? இந்த எண்ணம் எவ்வளவு காலத்துக்குச் செல்லும் என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது பற்றிய சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது. பார் எத்தகைய கண்டனங்களை எழுப்பியபோதிலும், பன்னிரண்டரை கோடி ரூபாய் ஜமீன்தார்களுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்படப்போவது உறுதி கொடுக்கட்டும்; ஆனால் இந்த பன்னிரண்டரைகோடிகாணிக்கையே முதலாளித்வத்துக்கு, மக்கள் கொடுக்கும் கடைசி காணிக்கையாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறோம்.

———

புதுடில்லி, ஜன. 11—
எகிப்தில் பிரபல பகுதி முதலாளியான அலிகின்லாம் பாஷா புதுடில்லிக்கு வந்து சேர்ந்திருக்கிறார். அவர் ஒரு மாத காலம் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

சென்னை மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

———

அறிவிப்பு

———

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக முதல் மாநாடு, ஜனவரி 15-ம் தேதியில் நடைபெறவிருந்ததை வெளியூர்த் தோழர்களது பொங்கல்நாள் கொண்டாட்ட வசதிக்கேற்ப, மாற்றி, ஜனவரி 21, 22, ஆகிய இரண்டு நட்களிலும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

டி மாநாடு 21-1-50 சனி மாலை 3 மணிக்குத் துவக்கப்பட்டு, மாலை 6 மணி வரை நடைபெற்று அதற்கு மேல் இரவு 9-30 மணிவரை, தோழர் சி. என். ஏ. எழுதிய புரட்சிச் சித்திர ஓரங்க நாடகங்கள் நிகழ்ச்சியுடன் முடிவடையும் மீண்டும் மறு நாள் 22-1-50 ஞாயிறு காலை 9 மணிக்கு மாநாடு ஆரம்பமாகி (இடைவேளை நீங்கலாக) மாலை 7—மணிக்கு முடிவடைந்த பின் இரவு 9 மணிக்கு, சி. என். ஏ, கே. ஆர். ஆர். நடிக்கும் "சந்திர மோகன்" நாடகம் நடைபெறும்.

குறிப்பிட்ட எண்ணிக்கைகான டிக்கட் போடப்பட்டுள்ளது. டிக்கட் வேண்டிய வெளியூர்த் தோழர்கள் தோழர் இரா. நெடுஞ்செழியன், 2/45 முத்துமாரிசெட்டித்தெரு, மண்ணடி சென்னை" என்ற முகவரிக்கு முன்னாகவே மணி ஆர்டர் செய்து டிக்கட்டிற்குப் பதிவு செய்து கொள்ளவும்.

இன்று முதல் சென்னையில் கீழ்க்கண்ட விடங்களில் டிக்கட் விற்பனை செய்யப்படும் :-

1. மாலைமணி ஆபீஸ். 2/45 முத்துமாரி செட்டித் தெரு, மண்ணடி, சென்னை.

2. எம். ஆர். பாண்டியன், பாண்டியன் ஜவுளிக்கடை மணியக்கார சத்திரச்சாலை வண்ணாரப்பேட்டை, சென்னை

8. எஸ். பாலசுந்தரம். மானுபதி ஜவுளிக்கடை நுங்கம்பாக்கம் ஐரோடு. நுங்கம்பாக்கம் சென்னை.

4. கே. திருவேங்கிடம், ரொட்டிக்கடை 200. ராசப்ப செட்டித்தெரு, பார்க் டவுன், சென்னை.

இரண்டு நாட்களுக்கும் டிக்கட் விவரம் :—

பிரதிநிதி	ரூ.	1-8-0
வரவேற்பாளர்	ரூ.	2-0-0
ஆதரவாளர்	ரூ.	5-0-0
நன்கொடையாளர்	ரூ.	10-0-0

கே. கோவிந்தசாமி
செயலாளர்.

மடல்விடு தூது

ஜ ஜீவன்ராம்,
தொழில் அமைச்சர்,
புதுடில்லி

அமைச்சரே, வணக்கம்.

தீண்டாதார் சார்பாக இந்திய மந்திரி சபையில் அங்கம் வகித்து தீண்டாதார்களின் உண்மைப் பிரதிநிதியாக இருந்து தொண்டாற்றி வருவதாகத் தாங்கள் அடிக்கடி கூறிவருகிறீர்கள். ஆனால் தங்களின் போக்கும் செயலும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு சிறிதும் பயன் படுவதாகவே இருப்பதில்லை.

அண்மையில் உலக மதங்கள் சங்க காங்கிரஸ் மகாநாட்டில் தாங்கள் பேசியிருப்பது முன்னுக்குப் பின் முரணாகவே இருக்கிறது. "சாமான்ய மனிதர் இயற்கையாகவே மதப் பற்றுள்ளவர்தான்; ஆனால் சுயநல கோஷ்டியினர் நமது சரித்திரம் பூராவும் மதப் பெயரில் மக்களைச் சுரண்டி வருகின்றனர்" எனப் பேசியிருக்கிறீர்கள். இதே கருத்தைதான் மாற்றுக் கட்சியினர் எடுத்துக் கூறி பல இன்னல்களை அடைந்திருக்கின்றனர். அவர்களெல்லாம் நாஸ்திகராகப் பட்டு நாட்டுத் துரோகிகளெனத் தூற்றப்படுகின்றனர். இந்த நேரத்தில் எந்த காங்கிரஸ் அமைச்சரும் துணிந்து எடுத்துக்கூற முடியாத இந்த அரிய உண்மையைத் தாங்கள் சொன்னது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். தங்களின் துணிவுடைமைக்குப் பாராட்டினேன்.

ஆனால் அதேகட்டத்தில் "இந்தியாவிலுள்ள தீண்டாமை ஹிந்து மதத்தின் மூலாதாரத்தில் காணப்படவில்லை. ஹிந்துமதம் ஆதிகாலத்திலிருந்து பரிசுத்தம் வாய்ந்தது. அம்மதம் சமாதானத்திற்கு அடிகோலும் மதம். அதில் சகிப்புத்தன்மை எல்லை கடந்து நிரம்பியுள்ளது" என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதைக்கூறி இந்துக்களிடம் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ள ஆசைப்பட்டிருக்கிறீர்கள் போலும்! தாங்கள் முதலில் கூறியதற்கு அடுத்துக் கூறியுள்ளது. முற்றிலும் முரண்பாடுள்ளது. ஹிந்து மதத்திற்கு ஆதாரமாக — சட்ட நூலாக விளங்கும் மனு நீதி ஒன்று போதுமே தீண்டாமைக்கு இந்த மதத்தில் இடம் உண்டா இல்லையா என்பதையறிய. பரிசுத்தம் வாய்ந்த அந்த இந்து மதத்தில் தானே பல உயிர்களைப் பலி கொடுத்து பல யாகங்கள் நடத்தப்பட்டன. இது இந்து மத மூலாதாரமான வேதங்களிலும் காணப்படுகிறதே! சமாதானத்திற்குப் பாடுபட்ட காந்தியாரின் உயிரைக்குடித்த இந்த மதத்தைத்தானே தாங்கள் "சமாதானத்திற்கு அடிகோலுவது, சகிப்புத்தன்மை எல்லை கடந்து அதில் உள்ளது" எனப் போற்றித் துதி செய்கிறீர்கள். தங்களின் இந்த விசித்திர விளக்கத்தைக் கண்டு வியப்படையாமல் வேறென்ன செய்வது? தீண்டப்படாத வகுப்பைக் கடவுளே படைத்தார் என்று கூறுவதைப் பலப்பல இந்துமத ஏடுகளிலிருந்து எடுத்துக் காட்ட இயலுமே. தாங்கள் எந்தக் கூட்டம் மக்களைச் சுரண்டுகிறதென்று குறிப்பிடுகிறீர்களோ அதே கூட்டத்திற்குத்தான் தங்களின் அசாரம் சலுகை காட்டி வருகிறது. இதைத் தடுப்பதற்கான வழிகளை யாவது செய்வீர்களாயின் தாங்கள் மிகவும் பாராட்டிற்குரியவராவீர்கள். அதை விடுத்து ஏதேதோ சமயத்திற்கேற்றவாறு பேசித் திரிவதை இனியாவது விட்டுவிட்டு உண்மைக்குப் பாடுபடுவீர்களென என்னுகிறேன்.

"எழுதுகோல்"

ஹிஸ் எக்ஸலன்ஸி
இராசகோபாலாச்சாரியார்,
கவர்னர் ஜெனரல்
புதுடில்லி

ஆச்சாரியாரே, வணக்கம்.

தாங்கள் 'ஹிஸ் எக்ஸலன்ஸி' யாக இருக்கும்பொழுதே தங்களுக்கு மடல் விடுக்க வேண்டுமென்றிருந்தேன். சமயம் வாய்க்கவில்லை. காலம் கடந்துவிட்டதென்றே இன்று எழுதலானேன் தாங்கள் இம்மாதம் 26ந் தேதிவரையில் தான் கவர்னர் ஜெனரல் பீடத்தில் அமர்ந்திருக்கத் தகுதியென்று வடநாடு தீர்ப்பளித்து விட்டதைக் கண்டு மிக மிக வருந்துகிறேன். அதோடு 27-ந்தேதியே தங்களைச் சாதாரண மனிதராக்கி ஊருக்கு அனுப்பிவிடக் காத்திருக்கிறது வடநாடு என்றசேதி இன்னும் திகைப்படையச் செய்தது. பார்த்தீர்களா வடநாட்டின் தன்மை எத்தகையது என்று! இப்பொழுது என்ன பார்ப்பது? நீண்ட நாட்களாகவே தங்களுக்குத் தெரிந்த விஷயம் தானே இதெல்லாம். தங்களின் அறிவுத்திறன் தேவைப்பட்ட பொழுது வடநாடு வரவேற்றது. அதைக் கண்டு தென்னாடு எவ்வளவு பெருமைப்பட்டது. என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இப்பொழுது வடநாடு தங்களுக்கு வழியனுப்பு செய்ய விருப்பதைக்கண்டு தென்னாடு அடையும் வருத்தத்தையும் தாங்கள் அறிவீர்கள். இதுவரை பயன்பட்ட தங்களின் அறிவு இப்பொழுது தேவையற்றுப் போய்விட்டதேன் என்பது நான் சிந்திக்க வேண்டிய விஷயம். தாங்கள் இது பற்றி அப்பொழுதே சிந்தித்து முடிவு செய்திருப்பீர்களென எண்ணுகிறேன். மேலும் 27-ந் தேதி சென்னையில் தங்களுக்கு "இராஜாங்க வரவேற்பு அளிக்கப்போவதாக அறிந்தேன். ஒரு புறத்தில் வருத்தமிருந்தாலும் ஒரு புறத்தில் மகிழ்ச்சியோடு தங்களை வரவேற்கிறேன். தங்களின் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மையை உணர்ந்து இனியாவது தென்னாட்டுப் பிரிவினை கோரிக்கையின் பொருளை தாத்பரியம் புணர்வீர்களென எதிர்பார்க்கிறேன். தங்களின் இனத்தாரும் இப்பொழுதாவது உணர்ந்திருப்பார்கள். சில ஆண்டுகளுக்குப் பின் "தென்னாடு எப்படியும் பிரிந்துதான் ஆக வேண்டும்" என பெரியார் அவர்களிடம் தாங்கள் கூறியதையும் நினைவூட்டுகிறேன்.

"எழுதுகோல்"

ரஷ்யாவில் மீண்டும் அணுக்குண்டு வெடித்தது?

நியூயார்க், ஜன. 11—
சோவியத் யூனியனிலுள்ள கஸாக்ஸாதில் ஞாயிறன்று அணுக்குண்டு வெடித்ததாகக் கூறப்படும் வதந்திகள் குறித்து யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்க இலாகா எவ்வித அபிப்பிராயத்தையும் வெளியிடவில்லை.

இரு பிரபல கால நிலை அறிவிக்கும் நிலையங்களில் இம்மாதிரி எதுவும் ஏற்பட்டதாகப் பதிவு செய்யப்படவில்லை.

முன்பு ரஷ்யாவில் ஏற்பட்ட அணுக்குண்டு வெடித்த சம்பவத்தைப் பதிவு செய்த ஸ்டார்கார்ட் கால நிலை அறிவிப்பு நிலையத்திலும் இதைப்பற்றி எவ்வித பதிவு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம்
பொங்கல் விழாப் பொதுக்கூட்டம்

நாள் :— **14—1—50** சனி

நேரம் :— மாலை 5-30 மணி

இடம் :— சர். பி. தியாகராயச் செட்டியார் உயர்நிலைப்பள்ளி மைதானம், வண்ணாரப்பேட்டை

தலைவர் :— டி. எம். பார்த்தசாரதி

சொற்பொழிவாளர்கள் :—

க. அன்பழகன், கா. அப்பாத்துரை, கே. ஏ. மதியழகன், டாக்டர் தருமாம்பாள், என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து, மா. இளஞ்செழியன், சி. டி. டி. அரசு, என். ஜீவரத்தினம், இரெ. இளம்வழுதி இரா. நெடுஞ்செழியன்,

சி. வி. ராசன், வி. உறுப்பினர்.

கே. கோவிந்தசாமி, செயலாளர்.

இந்தாலியில் உள்நாட்டுப்போருக்கான அறிகுறிகள்!

50 லட்சம் கம்யூனிஸ்டுகளின் எதிர்ப்பு முன்னணி!

மிலான், ஜன. 11—

மொடினுவில் ஏற்பட்ட கலவரத்தை யொட்டி இதலியில் உள்நாட்டுப் போர் மும்முரமாக ஆரம்பமாகும் என்று தெரிகிறது. கம்யூனிஸ்டு ஆதிக்கம் கொண்ட தொழிலாளர் பெடரேஷனைச்சேர்ந்த 50 லட்சம் பேர்களைக்கொண்டு, ஒரு எதிர்ப்புப் படையை அமைப்பது என்று கம்யூனிஸ்டு தலைவர்கள் ரகசியமாகக்கூடி முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது.

வட இதாலியில் தொழிலாளர்கள் ஸ்டிரைக் மும்முரமாக கிளம்பியிருக்கிறது: தொழிற்சாலைகள் பல மூடப்படுகின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. 60,000 பேர்களைக் கொண்டு ஐந்தாம் படை வேலையை நடத்துவதென மாஸ்கோ தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

மொடினு சம்பவங்கள் போல பல சம்பவங்கள் ஏற்பட்டு, உள்நாட்டுப் போரில் கொண்டு விட்டு விடுமென்று விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

மாகாணத்தில் இரும்பு-எஃகு பங்கீடு

1949 ஜனவரி 19 முதல் செப்டம்பர் இறுதிவரை சென்னைக்கு 12,06 டன் இரும்பும் எஃகும், 2,087 டன் இரும்புத் தகடுகளும் வந்து சேர்ந்திருக்கின்றனவென்று தொழில் மந்திரி தோழர் எச். சீத்தாராமரெட்டி சென்னை மேல் சபையில் ஜன. 10-ந் தேதியன்று குறிப்பிட்டார். இவற்றுள் விவசாய காரியங்களுக்காக 4,390 டன் இரும்பு—எஃகும், 499 டன் இரும்புத் தகடும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்தத் தகடுகள் பல்வேறு மாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றனவாம்.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை மாவட்ட தி.மு.க. நிர்வாகக்கமிட்டி அவசரக் கூட்டம்

13—1—50 வெள்ளி மாலை 6 மணிக்கு, மண்ணடி "மாலை மணி" அலுவலகத்தில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். மாநாடு சம்மந்தமாகவும், அங்கத்தினர் சேர்ப்பு சம்மந்தமாகவும், இன்னும் முக்கிய காரியங்கள் குறித்து கலந்து முடிவு செய்யவேண்டியிருப்பதால், மாவட்டக் கழக உறுப்பினர் அனைவரும் தவறாது வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கே. கோவிந்தசாமி, செயலாளர்.

பண்ட மாற்றுமுறையை மேற்கொள்ளுமாம் அமெரிக்கா!

லண்டன், ஜன. 11—

அமெரிக்கர்கள் விரும்பாவிட்டாலும் பண்ட மாற்று முறை வியாபாரத்தில் புகவேண்டிய ஸ்டேட்ஸ் இறங்கும் என்று தெரியவருவதாக லண்டன் 'ஸ்டார்' பத்திரிகை கூறுகிறது.

பொருள்களை சேர்த்துவைக்கும் கார்ப்பரேஷனிடம் ஏராளமாக ஸ்டாக்குகள் குவிந்துவிட்டதால், இம்முறை பின்பற்றப்பட அவசியம் ஏற்படுமென்று அப்பத்திரிகை கூறுகிறது.

இந்த கார்ப்பரேஷன் விவசாயிகளிடமிருந்து பருத்தி, உலர்ந்த முட்டைகள் முதலியவைகளை ஏராளமாக வாங்கி குவித்திருக்கிறதென்றும், இனி சரக்கு வாங்க அதனிடம் பணமுமில்லை என்றும் கூறப்படுகிறது.

இவைகளைக் கொடுத்துவிட்டு இதர நாடுகளிலிருந்து வேறு அமெரிக்கா முறைதேவைப்பட்டால் சாமான்கள் வாங்கவேண்டும். ஆகவே இதர நாடுகளுடன் அமெரிக்கா பண்டமாற்று முறையைக் கடைப்பிடித்து இந்த ஸ்டாக்குகளை குறைக்க வழிதேடலாம் என்று கூறப்படுகிறது.

இனி நடப்பவை

பழனி:— இவ்வூர் தி. மு. கழகத் துவக்கவிழா 13—1—50 வெள்ளி மாலை 5 மணிக்கு பவர் ஹவுஸ் மைதானத்தில் நடைபெறும். அதுபோது தோழர்கள் டி. கே. சீனிவாசன், அ. தமிழரசு, கா. வெங்கடாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். 14-1-50 சனி காலை 9 மணிக்கு கழகக் கட்டிடத்திலும், பாசறை ஆதிதிராவிடர் தெரு மைதானத்திலும் கொடியேற்று விழா நடைபெறும். மலர்வேசவர்கள்.

* * *

சென்னை:— அயன்புரம் வாணி வலர்கலா நாடக மன்றத்தின் சார்பில் (127 கொன்னூர் ஐரோடு) 15—1—50 மாலை 5 மணிக்கு ஓர் கூட்டம் நடைபெறும். அதுபோது சேர்ந்திருந்த நாடகம் ஒன்று நடத்துவது பற்றி ஆலோசித்து நடிகர்கள் தேர்ந்தெடுக்க இருப்பதால் ஆர்வமுள்ள தோழர்களனைவரும் வந்து கலந்துகொள்ளுமாறு தோழர் எம். சண்முகசுந்தரம் வேண்டுகிறார்.

சென்னை நகரசபை உறுப்பினர்கள் வெளியேற்றம்

சென்னை, ஜன. 11—

நேற்று மாலை நகரசபை சாதாரணக் கூட்டம் மேயர், டி. வி. செரியன் தலைமையில் நடைபெற்றது.

கல்வி நிர்வாகக் கமிட்டி தேர்தலில் தோழர்கள், நமசிவாய பாரதி, கே. எம். சுப்பிரமணியம், கௌதம் ஆகியோர் போட்டியிட்டார்கள். தோழர் கே. எம். சுப்ரமணியம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர் டி. செங்கல்வராயன் அவர்கள், மத்திய சட்டசபைத் தலைவர் தோழர் வி. ஜி. மாவ்லங்கார் அவர்கள் சென்னைக்கு வரும்போது அவர்களுக்கு ஒரு வரவேற்புபத்திரம் வாசித்தளிக்க வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவந்தபோது, தோழர் வி. முனுசாமி, என். ஜீவரத்தினம் ஆகியோர்களின் எதிர்ப்புக்கிடையே தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

தோழர். பு. கிருஷ்ணராவ் அவர்கள், இந்தியக் குடியரசு ஆரம்ப விழாவைச் சிறப்பாக கொண்டாடவேண்டும், அதற்கு ஆவன செய்யுமாறு கமிஷனர் அவர்களைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கொண்டுவந்தபோது, தோழர் என். ஜீவரத்தினம் தீர்மானத்தை எதிர்த்து பேசுகையில், இந்தியக் குடியரசு பாசிஸ்டு முறையில், ஆட்சி அமைக்கப்பட்டு, எங்கள் கட்சியையும், எங்கள் இனத்தவரையும் கொடுமைப்படுத்தும் நிலையில் இருப்பதால் நான் புதிய இந்தியக் குடியரசு அமைப்பு முறையைக் கண்டித்து இக்கூட்டத்தை விட்டு வெளியேறுகின்றேன் என்று கூறி வெளியேறினார். அதைத் தொடர்ந்து தோழர் வி. முனுசாமியும் தீர்மானத்தை எதிர்த்து ஒரு கட்சி ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, பணமூட்டைகளுக்கும், வடநாட்டாருக்கும் ஏற்ற வசதியாக ஆட்சி அமைக்கப்பட்டு எங்கள்மேல் சுமத்தும் கொடுமையை எதிர்த்து, கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள மறுத்து நானும் வெளியேறுகின்றேன்" என்று கூறிவிட்டு இருவரும் வெளியேறிய பிறகு மற்ற தேசியரின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சபை கலைந்தது. (ஈ-கி)

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

13—1—50

பழநி :— டி. கே. சீனிவாசன், அ. தமிழரசு, கா. வெங்கடாசலம்

கூனூர் (நீலகிரி) :— சி. பி. சிற்றரசு

14—1—50

விருதுநகர் :— சி. பி. சிற்றரசு

கோலார் தங்கவயல் :— திம்மையா, டி. கே. சின்னதுரை, கே. எஸ். கோபாலகிருஷ்ணன், கே. ஜி. சின்னராசன், கே. இராகுலன்.

பெரியார் நகர் (பெங்களூர்):— என் ஜீவரத்தினம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பெ. ம. துரைசாமி

15—1—50

நிலக்கோட்டை :— டி. கே. சீனிவாசன்

மதுரை :— சி. பி. சிற்றரசு, எஸ். முத்து, எம். அய்யாசாமி, கே. எஸ். ராஜமான்

பொங்கல் விழா நிகழ்ச்சிகள்

சென்னை

சென்னை :— பிரம்பூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் 14-1-50 சனியன்று பொங்கல் விழா நடைபெறும். நிகழ்ச்சி விவரம் :— காலை 8 மணிக்கு கொடியேற்று விழா 8-30 சிறுவர் விளையாட்டுப் போட்டி; 9-30 பரிசு வழங்குதல் 10-12 விழாக் கூட்டம். இடம்:— 1, பத்தர் தோட்டம் புதுத்தெரு, பிரம்பூர்.

பேரணம்பட்டு

இவ்வூர் இளைஞர் தமிழ்க் கழகத்தின் சார்பில் 17-1-50 மாலை 5-30 மணிக்கு பொங்கல் விழா நடைபெறும், அதுபோது தோழர்கள் சி. என். அண்ணாதுரை எம். ஏ; கே. ஏ. மதியழகன் பி. ஏ; எம். இன்னாசா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நிலக்கோட்டை

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் சார்பில் 15-1-50 ஞாயிறன்று பொங்கல் விழா கொண்டாடப்படும். தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றுவார்.

திருப்பூர்

இவ்வூர் வ. உ. சிதம்பரனார் வாலிபர் சங்கத்தின் சார்பில் 15—1—50 மாலை 6-30 மணிக்கு பழைய ரேடியோ மைதானத்தில் பொங்கல் விழா கொண்டாடப்படும். அதுபோது, தோழர்கள் குமாரசாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம், எம். இராசாக்கண்ணனார் பி. ஓ. எல். (ஆனர்ஸ்), எம். ஏ. எஸ் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கடுவனூர்

இவ்வூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் 14—1—50 அன்று பிச்சுகுண்டம் தோழர் பட்டாபி அவர்கள் தலைமையில் பொங்கற் புது நாள் கொண்டாடப்படும். தோழர்கள் குமாரதணிகாசலம், தேவப்பாண்டலம், டி. பி. கேசவன், இரா. எழில்நிலவன், அ. ஆசைப்பிள்ளை தோழியர் மங்கையர்க்கரசி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

உறந்தை

உறந்தை வள்ளுவர் மன்ற சார்பில் 14—1—50 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு உறையூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகில் உள்ள சேட்டியவார் இலவு உயர்நிலைப் பள்ளியில் பொங்கல் விழா நடைபெறும். தலைவர் :— சேலம் நகராண்மைக் கழக அங்கத்தினர் தோழர் ப. சுப்பராயன் அவர்கள்; சொற்பொழிவாளர் :— முனுசாமி அவர்கள் மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

மதுரை

இங்கு தி. மு. கழக சார்பில் கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில் 15-1-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு தமிழ்த்திருநாள் கொண்டாடப்பெறும். பேச்சாளர்கள்:—தோழர் சி. பி. சிற்றரசு, எஸ். முத்து, எம். அய்யாசாமி, கே. எஸ். ராஜமான்.

செங்கற்பட்டு

இங்கு இளைஞர் அறிவு மன்றத்தின் சார்பில் பொங்கல் விழா 17-1-50 செவ்வாய் மாலை 4-மணி முதல் பரி கொலவை உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் கொண்டாடப்படும். அவ்வமயம் தோழர் இரா. எதிராசன் அவர்கள் தலைமையில் சென்னைப் பச்சையப்பர் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

நிகழ்ச்சி விபரம்

மாலை 4 மணி இன்னிசை விருந்து 4-30 மாணவர் பேச்சுப்போட்டி 5.0 போட்டி முடிவு பரிசு வழங்குதல் 5-30 தலைவர் முன்னுரை 5-40 மந்திரிய கடந்த வருஷ ஆட்சி குறிப்பினைப்பற்றித் தலைவர் திக்கை, 5-50 தோழர் ஜி. கோதண்டராமன், 6-15 தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்களின் சொற்பொழிவு.

கோலார் தங்கவயல்

இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் வருகிற 14-1-1950 சனிக்கிழமையன்று ஷை கழக மனையில் உழவர் தம் பெருமையை உணர்த்துவதும் அறுவடைத் திருவிழாவானதுமான பொங்கல் விழா நடைபெறும். காலம்: பகல் 3 மணி. தலைவர் தோழர் திம்மையா பி. ஏ. பி. எல். சொற்பொழிவாளர்கள்: டி. கே. சின்னத்துரை, கே. ஜி. சின்னராசன், கே. எஸ். கோபாலகிருஷ்ணன், கே. இராகுலன்.

பெரியார் இராமசாமி நகரம்

14-1-50 சனி யன்று மாலை 4 மணிக்கு பெங்களூர் பெரியார் இராமசாமி நகர் திராவிட முன்னேற்றகழக சார்பில் அழகிரி பந்தலில் பொங்கல் திருநாள் கொண்டாடப்படும். அதுசமயம், தோழர் பெ. ம. துரைசாமி அவர்களின் தலைமையில் தோழர்கள் என். ஜீவரத்தினம், (சென்னை) ஏ. வி. பி. ஆசைத்தம்பி (விருதுநகர்) முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

தி. மு. கழகக் கிளைகள்

சென்னை 2-வது வட்டம்-நகர உட்கிளை

சென்னை, ஜன. 5—
1—1—50 ஞாயிறு காலை பத்து மணிக்கு, இராயபுரம் பனைமரத் தொட்டியில் தோழர் க. சண்முகனார் இல்லத்தில் ஓர் கூட்டம் நடைபெற்றது. தி. மு. கழகத்தில் ஆர்வமுள்ள எல்லாத் தோழர்களும் கலந்துகொண்டனர். அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்-சென்னை நகர 2 வது வட்டம் உட்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர் :—ஆர். எல். லிங்கராஜ்; பொருள் உறுப்பினர் :—என். என். சாமி; விளம்பர உறுப்பினர் :—சோமசுந்தரம்; ஏனைய செயற்குழுவினர் :— சிவசங்கரன், குப்புசாமி, அன்புமதி, மதலை, ஆர். சண்முகம், எம். கே. முத்து. சென்னை மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் என் ஜீவரத்தினம், ஆர். எல். லிங்கராஜ் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் கழகத் துவக்க விழாவினை தோழர்கள் சி. என். அண்ணாதுரை, என். ஜீவரத்தினம் ஆகியோரைக்கொண்டு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. பின் தோழர் மணி நன்றி நவில கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

திட்டகுடி—சிற்றூர்க் கிளை

திட்டகுடி, ஜன. 6—
4-1-50 புதன்கிழமை இரவு 8-மணிக்கு தோழர் மு. கோவிந்தன் அவர்கள் மண்டியில் தி.மு.க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் மு. கோவிந்தன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—திட்டகுடி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- இரா. இரத்தசாமி; துணைச்செயலாளர்- அ. மு. கந்தசாமி; பொருள் உறுப்பினர்- பூ. சுப்பிரமணியம்; விளம்பர உறுப்பினர்- என். தங்கவேலு. ஏனைய செயற்குழுவினர்:— சி. இராமலிங்கம், மு. கோவிந்தன், எஸ். பழனியப்பா, க. முருகன், இரா. கண்ணையன், இரா. பூமாலை, க. பார்த்தசாரதி, மு. துரைசாமி, இரா. இராமலிங்கம். பின்பு தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை அழைத்து கழகத் துவக்கவிழா வைபவத்தை நடத்துக் கொள்ளுவதென்றும், இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு, நன்றி கூறுதலுடன் கூட்டம்முடிவுற்றது. (வி.உ)

* * *

மேலக்கோட்டையூர், சின்னையாபுரம்— சிற்றூர்க்கிளை

மே. சின்னையாபுரம், ஜன. 5—
இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 29—12—49ல் தோழர் ஏ. சங்கரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர் எம் என். டி. மணி திராவிட நாட்டுப் பண் பாடினார். தோழர்கள் டி. சமாதான அரசன், சி. வி. இராஜன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். 'திராவிட முன்னேற்றக் கழகம் மே. சின்னையாபுரம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :—எஸ். வி பாண்டியன், துணைச்செயலாளர்: சி. நாராயணசாமி, நிதி உறுப்பினர்கள்—என். எம். செந்துரான், ஏ. என். ராஜேசன், விளம்பர உறுப்பினர் சி. வி. இராஜன் அமைப்பாளர்—ஏ. சங்கரலிங்கம்.

ஆண்டிப்பட்டி—சிற்றூர்க்கிளை

ஆண்டிப்பட்டி, ஜன. 7—
இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 5—1—50-ல் தோழர் ஆதிஅப்பன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—ஆண்டிப்பட்டி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :—த. துரைபாண்டியன்; துணைச் செயலாளர் :—ச. வள்ளியரசன்; பொருள் உறுப்பினர் :—அ. மு. சங்கரலிங்கம்; விளம்பர உறுப்பினர் :—எம். எஸ். பால்ராசு. (வி-உ)

* * *

பாவனுசம் — சிற்றூர்க்கிளை

பாவனுசம், ஜன. 2—
23—12—49 அன்று தோழர் என். சி. மன்னீர் செல்வம் தலைமையில் கூடிய அமைப்புக் கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்-பாவனுசம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :—என். சி. மன்னீர் செல்வம்; பொருள் உறுப்பினர் :—பழ. கோவிந்தசாமி; விளம்பர உறுப்பினர் :—அர. பெருமாள்; ஏனைய செயற்குழுவினர் :—தி சோமு, க. இராமசாமி, ம. கோவிந்தராசன், தி. சிங்காரம், ச. சுந்தரமூர்த்தி, இரா. காத்தையன், செ. வெற்றிவேந்தன்.

* * *

சேரன்மாதேவி — சிற்றூர்க்கிளை

சேரன்மாதேவி, ஜன. 7—
இவ்வூர் சார்நிலைச் அருகிலுள்ள கழகக் கட்டிடத்தில் 6—1—50ல் திராவிட வாலிபர் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. உள்ளூர், வெளியூர் கழக அனுதாபிகள் பெருந்தொகையோர் குழுமியிருந்தனர். அதுபோது இக்கழகத்தை "திராவிட முன்னேற்றக் கழகம்— சேரன்மாதேவி சிற்றூர்க்கிளை" எனமாற்றியமைக்க வேண்டுமென தோழர் க இரத்தினம் ஓர் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதை ஆதரித்து தோழர் சன் மீரசையா, பெரிய மீரான், ஆகியோர் பேசினர். பின்பு தீர்மானம் நிறைவேறியது. இறுதியாக கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—என். எஸ். காதர்; துணைச் செயலாளர்:—எஸ். பிச்சையா, நிதிஉறுப்பினர்: கே. பெரியமீரான், விளம்பர உறுப்பினர்:—க. ரத்தினம், ஏனைய செயற்குழுவினர்:—ப. தேமியான், ஏ. இராஜேந்திரன், எஸ். பி. முத்தையா, கே. பூபாசி, எஸ். தாசன், ரா. ராஜமணி, பி. சுப்பையா, எஸ். சங்கரன். பின்பு கழகக்கொடி ஏற்றுவிக்கப்பட்டு, கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

உசிலம்பட்டி — சிற்றூர்க்கிளை

உசிலம்பட்டி, ஜன 10 -
8—1—50 ஞ யிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு அண்ணா சாலையில் கழக அமைப்புக் கூட்டம் தோழர் அ. க. தங்கமணி தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—உசிலம்பட்டி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— உ. ஏகாதன், துணைச்செயலாளர் இரா. சுந்தரம்; பொருள் உறுப்பினர்:—சி. ப. கராசன், விளம்பர உறுப்பினர்கள்:- து. பா, இரா செழியன், அ. தி. எழில்மாறன்.

ஏனைய செயற்குழுவினர்:— அ. க. தங்கமணி, ப. சி. உசிலை மன்னன், வள்ளல்; இரா. தே. இராசன், கார்த்திகைசாமி.

மதுரை மாவட்ட உறுப்பினர்களாகத் தோழர்கள்:-தனுஷ்கோடி அ. சண்முகவேல் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்பு பொங்கல் திருநாளன்று துவக்க விழா நடத்துவதென்றும், அதற்கு தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியை அழைப்பதென்றும், அண்ணா அவர்களின் மதுரைமாவட்டச் சுற்றுப்பிரயாணத்தின் போது அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

செயலாளர் நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது.

* * *

பெருந்தோட்டம் — சிற்றூர்க்கிளை

பெருந்தோட்டம், ஜன. 8—
இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 5-1-49 இரவு 8—மணிக்கு தோழர் பிரான்சுவா இல்லத்தில், தோழர் மு. சம்மந்தனார்களின் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் பல தோழர்கள் கழகக் கொள்கையைப் பற்றி பேசினர். பின்பு "திராவிடர் முன்னேற்றக் கழகம் பெருந்தோட்டம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-வி. இளங்கோவன், துணைச் செயலாளர்-மு. சம்மந்து பொருளாளர் வை. சம்பந்தம், விளம்பர உறுப்பினர். கோ. ரெங்கநாதன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள். எஸ். ராசமாணிக்கம் எ. எம். சக்கிரியா, கே. சண்முகம், டி. பி. சண்முகம், வை. இரத்தினம் எஸ். அலாவுதீன், பிரான்சுவா.

"பொன்னி"

பொங்கல் மலர்—1950

"திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சாரகர்களா, இத்தனைபேரும்" என்று வியப்படையப் போகிறீர்கள்! ஏறக்குறைய ஐம்பது பேச்சாளர்களின் புகைப் படங்கள் கண்கவரும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளன.

முற்றும் ஆர்ட் தாளில் வெளிவரும் கலைக் களஞ்சியம்

விலை ரூ. 3-12-0 தபாலில் ரூ. 4-0-0

'பொன்னி' அலுவலகம்,
த. பெ. 39 — புதுக்கோட்டை.

குழந்தைகளின் கலைப் பத்திரிகை

முத்து

பொங்கல் மலர்—1950
விலை 8 அணு
பொங்கலன்று வெளியாகிறது
தபாலில் பெற விரும்புவோர் 9 அணு ஸ்டாம்பு அனுப்புக.
விற்பனையாளர் கமிஷன் 25%
முத்து அலுவலகம்,
கீழ ராச வீதி, :: புதுக்கோட்டை.

1950-ல் ஸ்டர்லிங் கடன் நிலைமை

லண்டன், ஜன. 11—
ஸ்டர்லிங் கடன் நிலைமை காமன்வெல்த் அயல் நாட்டு மந்திரிகள் மாநாட்டில் கட்டாயம் விவாதிக்கப்படும் என்றும், இந்தியா, பாகிஸ்தான், எகிப்துக்கு பிரிட்டன் கொடுக்கவேண்டிய கடன் பாக்கியில், பகுதியை யுனைடெட் ஸ்டேட்ஸ் மார்ஷல் உதவி போல் உதவுவதுமூலம் கொடுக்கும்படி செய்யப்படலாம் என்று 'நியூஸ் குரானிகள்' பத்திரிகையின் லண்டன் ஆசிரியர் ஆஸ்கார் ஹாப்ஸன் எழுதுகிறார்.

வளமான திராவிடம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கிறார்களா. இந்த சர்வாதிகார சர்க்கார் குண்டந்தையிலே 144 போட்டதாக நாம் பார்க்கின்றோம். போலீசார், சிறிதும் கருணையின்றித் தோழர்களைத் தாக்கினார்கள். தருமமா? நீதியா?

நாம்தான் வடநாட்டைப் புறக்கணிக்கிறோம், அங்கு தோன்றியுள்ள பசிதாரணமக்களைப் பிறமனிதர்களாகக் கருதுகிறோம். ஆனால், வடநாடு தென்னாட்டை என்னுவது, எந்த வகையிலாவது, மதித்து நடத்தப்படுகிறதாவென்று பாருங்கள்.

கடைசியாக, தலைவர் கோ. கோபால் அவர்கள் முடிவுரை கூறுகையில்:—காங்கிரஸ் தோழர்கள் அகிம்சையிலேயே நம்பிக்கைக் கொண்டிருப்பதையும், அதை மக்களுக்கு எடுத்துக் கூறுவதையும் தவறென்று கூறவில்லை, ஆனால் அகிம்சை நிலை பெறுவதற்குத் தகுந்த சூழ்நிலையை உண்டாக்க இன்றைய ஆட்சியாளர்கள் வழிசெய்யவேண்டுமென்றும், பாம்பும் தேளும் பூரானும் நிறைந்த வீட்டிற்குள்ளே ஒருவனை அடைத்து அகிம்சையோடு நடந்து கொள்ளவேண்டுமென்று சொன்னால், அவன் எப்படி நடந்துகொள்ள முடியும்? அதேமாதிரிதான், இன்று நாட்டிலே பசியும் தரித்திரமும் மக்களைப் பாதிக்க, பணக்காரர் ஏழைகளை அடக்க, இந்தப் புண்ணிய காரியத்தைச் செய்வதில் சர்க்கார் முதலாளிகளுக்கு உதவியாக நிற்க, இந்த நிலையில் பொதுமக்கள் அகிம்சாப் பணியில் இறங்குவதெங்ஙனம்? என்றும். இன்னும் பல அரிய கருத்துக்களை பல உதாரணங்களோடு மிக விரிவாகப் பேசினார்.

பின்னர், திராவிட முன்னேற்ற வாலிபர் கழகச் செயலாளர் தோழர் அ. ச. பாலு அவர்கள் நன்றிகூற, இரவு 10 மணிக்கு கூட்டம் முடிவடைந்தது. தோழர் கோ கோபால் அவர்கள் வீட்டில் தோழர் மு கருணாநிதிக்கும், அவருடன் கோவையிலிருந்து வந்திருந்த தோழர்களுக்கும் விருந்துபசாரம் நடத்தப்பட்டது. (வி-?)

பயிர்களுக்குப் பெரும் தீங்கு விளைவிக்கும் வெட்டுக்கிளியை ஒழிப்பதற்கான மாநாடு பாரிஸில் பிப்ரவரி 1-ல் கூடவிருக்கிறது. இதில் லெபனன், பர்லியா, ஸிரியா, துருக்கி, ஈராக், ஜோர்டான் ஆகிய நாடுகள் கலந்துகொள்ளும்.

தமிழ்த்திருநாள் பேரவை

வேலூர் உலகத் தமிழ்மக்கள் சீர் உரிமைச் சமரசப்பும் பேரவை சார்பில் பொங்கல் விழாவை யொட்டிய தமிழ்த் திருநாள் பேரவை, 14-1-50 முதல் 20-1-50 வரை வேலூர் இலட்சுமணசாமி முதலியார் நாராயண மண்டபத்தில் நடைபெறும். சான்றோரும் தமிழ் நிலமெங்குமுள்ள தமிழ்ப் பெரியார்களும், பேரறிஞர்களும், தமிழ்ச் செல்வர்களும் கலந்து அறிவுரைகள் ஆற்றுவர் என பேரவையார் அறிவிக்கின்றனர்.

வானொலி

(13-1-50 வெள்ளிக்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை :
- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 வி. சுப்புலட்சுமி—பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
- 8 50 கிராமி. (அ. இ. ரே. வி.)

பிற்பகல் :
- 12-30 வி. சாரதாம்பாள்—பாட்டு
- 1-00 மாதர் நிகழ்ச்சி
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
- 2-00 தமிழில் செய்திகள்

மாலை :
- 5-30 டி. எஸ். லட்சுமி அம்மாள் பாட்டு
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்

இரவு :
- 7-00 கோபு—பேச்சு
- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 நால்வகை (இசைத்தட்டு)
- 8.00 மஞ்சள் கொத்து சதம் நிகழ்ச்சி
- 8 30 எம். கே. கனகாம்பாள்—வீணை
- 9.00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 பல்கலைக் கழகங்களுக்கு
- 10-30 முடிவு

* * *

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை :
- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 பி. ஆர். சிதம்பரம்பிள்ளை —பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 திருப்பதி வாத்ய கோஷ்டி
- 8 50 ஆர். ஆர். கேசவமூர்த்தி—வயலின் (இசைத்தட்டு)

பிற்பகல் :
- 1 00 சதாரம் (இசைத்தட்டு)
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 டி. எஸ். சகுந்தலா சமி—பாட்டு
- 2 00 தமிழில் செய்திகள்
- 2-10 சீனிவாச ராகவாச்சாரி—பாட்டு

மாலை :
- 5 00 வி. ஆ. சிவசுப்பிரமணியம்பிள்ளை -பாட்டு
- 5 30 ஐந்து வயலின்கள் (அ. இ. ரேடியோ வித்வான்கள்
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :
- 7-15 தமிழில் செய்திகள்
- 7 30 சித்ரகானம் (இசைத்தட்டு)
- 7 45 சமது தபால் பெட்டி
- 8.00 பிச்சைக்கண்ணு சகோதரர்கள்—நாகஸ்வரம்
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 நாட்டுப் பாடல்கள்
- 9-35 இசை வேலை (இசைத்தட்டு)
- 1 முடிவு

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street: Madras-1.